# ‘எமது பாதுகாப்பை நாமே தேடிக்கொள்வோம்’ வெலிகடை படுகொலை நினைவாகப் புலிகள்

ஸ்ரீலங்கா அரசு தற்போது தமிழ்பேசும் மக்களின் பகுதிகள் முழுவதிலுமே தாக்குதல்களை நடத்திவருகிறது. உணவுப் பொருட்களஞ்சியங்கள் மருந்து வகைகள் கடைகள்; பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் என்று எவற்றையுமே இயங்கவிடாது அழித்துவருகிறது இவ்வாறு விடுதலைப்புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ஸ்ரீலங்கா அரசு தமிழ்பேசும் மக்கள் மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் எல்லை மீறிக் கொண்டு போகின்றன. சிங்கள இராணுவத்தினரும் ஊர்காவல்படையினரும் குடியிருப்புக்குள் புகுந்து அப்பாவித் தமிழ்மக்களை வெட்டியும் சுட்டும் கொன்று குவிக்கின்றனர். தாக்கி துன்புறுத்துகின்றனர். அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களை விரட்டி விரட்டித் தாக்குகின்றனர், தாக்குதல்களிலிருந்தும் தப்புவதற்காக —4ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு · விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 162 புதன் 25-07-1990 (ஆடி 09) முஹர்ரம் 02

### ஜனாதிபதி பிரேமதாஸ சொல்கிறார்

# இராணுவ நடவடிக்கை சமகாலத்தில் பேச்சுக்கள்

“சட்டம் ஒழுங்கைப் பேணவே வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, இதனை நான் வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். எனினும் பேச்சுவார்த்தையே இப்பிரச்சினைக்குத் தீர்வாக இருக்க முடியும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி திரு, ஆர். பிரேமதாஸ நேற்று மத்திய மாகாணத்தில் நடைபெற்ற பேரணி ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

‘‘வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வுகாண முடியும்’’ என்றார் அவர்.

அவர் மேலும் சொன்னார் ‘‘வடக்கு, கிழக்கில் சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றவே அரசாங்கம் இன்று பாடுபடுகிறது. அங்கு சட்டம். ஒழுங்கைக்காப்பாற்றவேஇராணுவ நடவடிக்கை அவசியமாகிறது வருத்தமும் இதனால் ஏற்படுகிறது’’. ஸ்ரீ

## மூவாயிரம் துருப்புகள்

ஆனையிறவு- பரந்தன் பகுதியில் நடைபெற்று வரும் மோதல்களுக்கு உதவியாக மூவாயிரம் துருப்புகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. து

## சுன்னாகத்தில் பவல்

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட பவள் கவசவாகனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் மயிலணி வித்தியாசாலை அருகாமையில் பொது மக்களின் பார்

—04ஆம் பக்கம் பார்க்க

## கோட்டையில் பற்றாக்குறை

கோட்டையில் தற்போது உணவுப்பற்றாக் குறையும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று கொழும்பில் தெரிவித்தது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## மானிப்பாய் வைத்தியசாலையில் புதியபிரிவு ஆரம்பிக்க கட்டடமில்லை

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலை நோயாளர்களின் தொகைக்கேற்ப பெரிதாக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவாரம் பிரசவ நோயாளர்களின் நன்மைகருதி அருகில் உள்ள கட்டடத்தின் ஒருபகுதியில் புதிதாக பிரசவ விடுதி அமைக்கப்பட்டது. இதற்குதேவையான கட்டில்கள் உபகரணங்கள் யாழ் போதனா வைத்திய சாலையில் இருந்தே கொண்டுவரப்பட்டன.

மேலும்இவ்வைத்தியசாலையில் புதிய பிரிவுகளை அமைப்பதற்கு போதியளவு வசதிகள் இல்லை கட்டட வசதிகள் இருந்தால் புதியபிரிவுகளை அமைக்கமுடியுமென அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (03து)

## இலங்கை நிலைகுறித்து ஐ பொ. ச. கடும் கண்டனம்

இலங்கையில் மீண்டும் போர்ச் சூழல் ஏற்பட்டிருப்பதை ஐரோப்பிய பொருளாதார சமூகம் (E. E. C) கண்டித்துள்ளதுடன் தனது ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துள்ளது.

—04ஆம் பக்கம் பார்க்க

### தமிழக முதல்வர் கருணாநிதி கேட்கிறார்

## ராணுவத்தை எதிர்க்கவே ஆயுதம் தேவை புலிகள் ஆயுத விநியோகம் செய்வாரா?

தி. மு. கவின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் இந்திய பஞ்சாப், ஆந்திர தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்குகின்றனர்என எதிர்க்கட்சித் தலைவர் ராஜீவ்காந்தி கூறியதை தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி மறுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தையே எதிர்த்து போராட புலிகளுக்கு ஆயுதங்கள் தேவையாக உள்ளபோது பஞ்சாப்பிற்கும், ஆந்திராவுக்கும் அவர்கள் ஆயுதம் வழங்குகிறார்கள் என்ற கூற்றில் சிறிதேனும் அர்த்தமில்லை எனக் குறிப்பிட்ட கருணாநிதி, தமிழக மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது குறித்து தாம் இந்திய கடலோர பாதுகாப்புப் படைத் தளபதியுடன் பேச்சுகள் நடாத்தியதாகவும் குறிப்பிட்டார். து

## சுழற்சி முறை மின்சாரம் இன்றைய தினம் கிடைக்கும்

யாழ். மாவட்டத்திற்கான சுழற்சி முறை மின்விநியோகம் இன்று நண்பகலில் இருந்து வழங்கப்படுமென மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் சுன்னாகத்தில் இயங்கி வந்த

—04ஆம் பக்கம் பார்க்க

## ஊழியர்கள் சீருடையில் இல்லை நோயாளர்கள் பெரும் அவதி

மானிப்பாய் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் சீருடையில் காணப்படாததனால் அவர்களை இனம் காணமுடியாதுள்ளதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

—04ஆம் பக்கம் பார்க்க

# பரந்தன் சந்தியில் புலிகள் தொடர் தாக்குதல்

# 3-வது நாளாக முன்னேற முடியாத ராணுவம்

பரந்தன் சந்தியில் நிலைகொண்டுள்ள ஆனையிறவு இராணுவத்தினர் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் மீண்டும் விமானங்களின் உதவியுடன் கிளிநொச்சி முகாம் நோக்கி முன்னேற பாரிய முயற்சிகள் எடுத்த போதும் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களினால் அவ்விடத்தை விட்டு மேலும் முன்னேற முடியாது நிலைகொண்டுள்ளனர். அத்துடன் பூங்காவனம் சந்தியில் நின்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பரந்தன் சந்திக்கு மீண்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற தாக்குதலில் சீலன் (மன்னார்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். கிளிநொச்சி முகாமைச்சுற்றியும் பரந்தன் பகுதியிலும் பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள், ஹெலிகள் போன்றவை நேற்றும் கடும் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்றுமுன் தினம் முரசுமோட்டை 2-ம் கட்டையில் நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 4 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். மனோஜ், வெஸ்லி, சரவணன், ரேனு ஆகியோர் வீரமரணமடைந்தவர்களாகும்.

இத் தாக்குதலில் பின்வாங்கிய இராணுவத்தினர் 3 பொதுமக்களை சுட்டுக் கொன்றுவிட்டு பரந்தன் சந்திக்குச்சென்றதாகவும். புலிகளின் மற்றைய ஒரு முனைத் தாக்குதலையடுத்து இராணு

04 ஆம் பக்கம் பார்க்க

### ஈரோஸ் உறுப்பினர் ராஜினாமா!

# தமிழ் உறுப்பினர் தொகை 10 ஆகக் குறைந்தது

இலங்கைப் பாராளு மன்றத்தில் தமிழ் உறுப்பினர்களின் தொகை பத்தாகக்குறைந்துள்ளது.

நேற்று முன்தினம் ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) உறுப்பினர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் கடந்த 19-ம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். மற்றும் இருவர் முன்னர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்திருந்தனர். எஞ்சிய பத்து உறுப்பினர்களும் நேற்று முன்தினம் கொழும்பில் தமது பதவி துறப்புக் கடிதங்களை கையளித்தனர்.

இதனால் வட, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை பாராளுமன்றத்தில் 23-ல் இருந்து 10 ஆக தற்பொழுது குறைந்துள்ளது. (கி)

### 3 வருடசேவையைப் பூர்த்தி செய்த

# பதில்அதிபர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும்

பதில் அதிபர்களாக மூன்று வருட காலம் சேவை புரிந்த ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1988-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதியன்று பதில் அதிபர் பதவிகளில் மூன்று வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதிக்குள் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள பதில் அதிபர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதனால் இந்த நியமனம் வழங்கலில் பாதிக்கப்பட்டவர்கள் எவராவது இருப்பின் மேன்முறையீடு செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

அமெரிக்கத் தீவுகளான

★ சைப்பான் ★ மஜுரோ

நாடுகளில் தொடர்மாடிக் கட்டட வேலைகட்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவைப்படுன்றனர்.

| | |
|---|---|
| தச்சர் | பிளம்பர் |
| மேசன்மார் | எலக்ரிஷியன்ஸ் |
| கம்பிவேலையாட்கள் | மெக்கானிக்ஸ் |

சம்பளம்:- U. S. டொலர் $1\frac{1}{2}$ / மணி.
O. T. :- U. S. டொலர் $2\frac{1}{4}$ / மணி.

நேரில் வரவும்

**வி. ஸ்ரீரஞ்சனி**
கொல்லன்கலட்டி வீதி,
தெல்லிப்பளை மேற்கு.

அம்பனைச் சந்தியிலிருந்து 400 யார் தூரத்தில்
(பாலர் பாடசாலை முன்பாக)

ஏற்கனவே வந்தவர்களும் மீண்டும் வந்து சந்திக்கவும்.

07045



## OFFICE EQUIPMENT LTD
## தற்காலிக இடமாற்றம்

எமது ஸ்தாபனத்துடன் பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளலாம்

1. நம். 537, சிவன் கோவில் வீதி
   ( CENTRAL NURSING HOME முன்பாக )
   திருநெல்வேலி தெற்கு

2. உருக்குத் தளபாட உற்பத்தித் தொழிற்சாலை
   வேம்பன் வீதி, (பெற்றோல் செட் முன்பாக)
   உரும்பிராய்.

அலுவலக நேரம்:- காலை 8-30 மணி தொடக்கம்
பி. ப. 1-00 மணி வரை

07034


## இடம் பெயர்ந்த புகையிரதஊழியருக்கு சம்பள முற்பணம்

ஸ்ரீலங்கா அரசபடைகளின் தாக்குதல்களினால் வெளி மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள சகல புகையிரதப் பகுதி ஊழியர்களுக்கும்யாழ்.செயலகத்திலிருந்து சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வுதவிப் பணம் பெறாத வெளிமாவட்ட ஊழியர்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்களைச் சந்தித்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## திருநிலைப்படுத்தல் சடங்கு

(வேலணை)

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அருட் சகோதரர் கொலிஸ் சாள்ஸ் குருவாகதிருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

எதிர் வரும் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மரியநாயகி பேராலயத்தில் திருநிலைப்படுத்தல் சடங்கு நடைபெறவுள்ளது. (19 கி)

## சுழற்சி முறை மின் விநியோகம் தடை

சுன்னாகம் மின்வளங்கியில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக நேற்று முன்தினம் முதல் குடாநாட்டிற்கான சுழற்சிமுறை மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. திருத்த வேலைகளைத் தொடர்ந்து ஓரிரு தினங்களில் மீண்டும் சுழற்சி முறை மின்விநியோகத்தை ஆரம்பிக்கமுடியும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (68-கி)

## மாலைதீவு பாகிஸ்தானுக்கு

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து சார்க் நாடுகளுக்கு விளக்கம் அளிக்கச் செல்லும் பாராளுமன்றத் தூதுக் குழுவினர் எதிர்வரும் வாரங்களில் மாலைதீவிற்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கி)

## வணிக மன்றப் பொதுக் கூட்டம்

நாளைக் காலை 10.00 மணிக்கு யாழ். தொழில் நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்திற்கு உயர் வணிக மாணவ மன்ற அங்கத்தினர்களை சமுகமளிக்குமாறு மேற்படி சங்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கி)

# அகதி முகாம்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படும்

யாழ் குடாநாட்டில் தற்போது இயங்கி வரும் அகதி முகாம்களை ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டுவரப்படும் நோக்கில் முதல் நடவடிக்கையாக குடாநாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள முகாம்களின் விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இதேவேளை ஆங்காங்கு பரந்து வாழும் அகதி மக்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் பட்சத்தில் பொதுஸ்தாபனங்கள் அவற்றுக்கு உதவக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதை தொடர்பாக நேற்று குடாநாட்டின் பல பொதுஸ்தாபனங்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (9-கி)

# ரஞ்சனின் கொடும்பாவி எரிப்பு

பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னவின் கொடும்பாவி பறைமேளம் ஒலிக்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு தகனம்செய்யப்பட்ட சம்பவம் இளவாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நிகழ்ந்துள்ளது.

இளவாலை சந்தியிலிருந்து அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னாவின் கொடும்பாவியுடன் புறப்பட்ட மரண ஊர்வலம் பண்டத்தரிப்பு, சிறுவிளான், முள்ளானை ஆகிய இடங்களுக்கு ஊடாக பறைமேளம் ஒலிக்க ஒப்பாரியுடன் மீண்டும் இளவாலை கொண்டு செல்லப்பட்டு இளவாலை சந்தியில் வைத்து தகனம் செய்யப்பட்டது. பெருந்தொகையான மக்கள் இதில் கலந்து கொண்டனர். (கி)

# உணவுப் பொதிகள் படும்பாடு

முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு ஹெலி மூலம் போடப்பட்ட பொதிகளில் 15 பொதிகள் மட்டுமே முகாமிற்குள் விழுந்தது. ஏனைய 16 பொதிகள் முகாமிற்கு வெளியேயே விழுந்தன .முகாமிற்கு வெளியே விழுந்த பொதிகளை எடுக்க முயன்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் பின்வாங்கினர்.

இதேவேளை மாங்குளம் இராணுவ முகாமிற்கு நேற்று முன்தினம் ஹெலிமூலம் போடப்பட்ட பொதிகளில் 30 பொதிகளே முகாமிற்குள் விழுந்துள்ளன. (ப 5 கி)

# இன்று மாணவர் எழுச்சி ஊர்வலம்

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் தமிழ் மாணவர்களின் கல்வி தொடர்பான அடக்குமுறைகளைத் கண்டித்து மாபெரும் எழுச்சி ஊர்வலமொன்றை நடாத்தவுள்ளது.

இன்று புதன் கிழமை காலை 9மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகும்,

சகல பாடசாலைகளின் உயர்தர மாணவர்களையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் சீருடையில் தவறாது சமுகமளிக்கும்படி மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது (கி)

# யாகப்பர் ஆலயம் சேதம்

(வேலணை)

ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயம் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால் இன்று (25. 7.90) புதன்கிழமை இவ்வாலயத்தில் நடைபெறவிருந்த வருடாந்தத் திருவிழா காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை அருட் திரு கிருபானந்தன் அடிகளார் அறிவித்துள்ளார். (19 கி)

# நண்டு இறாலுக்கு நல்ல கிராக்கி

நண்டு, கணவாய்,இறால் என்பனவற்றுக்கு குடாநாட்டில் தற்பொழுது அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அதேவேளை ஏனையபெரிய மீன்கள் சந்தையில் கவனிப்பாரற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடலில் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களுடைய முண்டங்கள் குடாநாட்டுக் கரைகளில் ஒதுங்கியதை அடுத்து மீன்களை உண்ண மக்கள் தயக்கம் காட்டி வருவது தெரிந்ததே. (கி)


இன்றைய நிலையில்
உங்கள் தேவையை
பூர்த்தி செய்ய

**பொபி சோடா**
**பொபி நெல்லிரசம்**
**பொபி இண்டஸ்றீஸ்**

கண்டி வீதி
கைதடி, நுணாவில்

07040


## செஞ்சிலுவைச் சங்க உணவுப் பொதி வந்து சேர்ந்தது

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைக்கு1900 உணவுப்பொதிகள் அகதிகளுக்கு வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வுணவுப்பொதிஒவ்வொன்றிலும் 10 கிலோ அரிசி, மிளகாய், மெழுகுதிரி,தீப்பெட்டி, சீனி, சவர்க்காரம், கருவாடு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்குகின்றன.

மடு, செட்டிக்குளம் பகுதிகளில் தங்கியுள்ள அகதிகளுக்கு 350 உணவுப் பொதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன. மிகுதி உணவுப் பொருட்கள் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள திருகோணமலை அகதிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (03கி)

தமிழக திராவிடர் கழகம் அவசரக் கோரிக்கை

# இந்திய அரசு உடன் தலையிட்டு தமிழ்மக்களைக் காக்க வேண்டும்

இலங்கையில் தமிழர்கள் அரச படைகளினாலும், சிங்களக் காடையர்களினாலும் கொல்லப்படுவதைத் தடுக்க இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும்.

தமிழ்நாடு திராவிடர் கழக இளைஞர் பிரிவு இந்திய மத்திய அரசாங்கத்திடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் சென்னையில் அவசரமாகக்கூடிய திராவிடர் கழக இளைஞர் பிரிவு இத்தீர்மானத்தை எடுத்து மத்திய அரசுக்கு அவசரமாக அனுப்பியதாக அறிவிக்கப் படுகின்றது.

இலங்கையில் தமிழர்கள் தினந்தோறும் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டு வருகின்றார்கள். இதனை இலங்கையின் உள்நாட்டு விவகாரமெனக்கருதி இந்தியா சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது எனவும் திராவிடர் கழக இளைஞர் பிரிவு கேட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை தமிழகத்திற் குஏற்றி வர இந்தியா உடனடியாகக் கப்பல் அனுப்ப வேண்டுமெனவும் திராவிடர் கழக இளைஞர் அணி மத்திய அரசைக் கேட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் திராவிடர் கழகம் ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கி)

வவுனியா வீட்டு உடமைகளில்

## பெறுமதிமிக்கவை படையினருக்கு எஞ்சியவை திருடர்களுக்கு

வவுனியாவின் பல பகுதிகளிலும் வன்செயல்களினால் பாதிப்படைந்து யாழ்.மாவட்டம் வந்து தங்கியிருக்கும் பலரது வீடுகள் உடைக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவின் அயற் கிராமங்களான குருமன்காடு, ஸ்ரேசன் வீதியடி, வைரவர் புளியங்குளம் போன்ற இடங்களிலேயே கூடுதலான வீடுகள் கொள்ளையிடப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றி அறியவருவதாவது, வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து செல்வதை அவதானித்து விட்டு வரும் கள்வர்கள் ஒருபுறமும், பெறுமதிவாய்ந்த ரி. வி, டெக், றேடியோ போன்ற பொருட்களை அரசபடையினரும் சில பகுதிகளில் அபேஸ் பண்ணியதாகவும் அறியப்படுகிறது.

சாறிகள் எடுக்கும் போது எல்லாவற்றையும் எடுக்காது இவர்கள் நல்லவற்றைத் தெரிந்தெடுத்துச் செல்கின்றனராம். (ப 1-கி)

டில்லியில் அனுரா சொல்கிறார்!

## புலிகளை மக்கள் நேசிக்கிறார்கள் இதனால் ராணுவத் தீர்வுவெல்லாது

விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டுவர பாரதம் முயன்றால் அதனால் பலன் கிட்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம் பி. அனுரா பண்டார நாயக்க இந்தியாவில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

'விடுதலைப் புலிகள் யாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்கள். எனவே அவர்களை இராணுவ வழியில் கட்டுப்படுத்துவது கடினம்'.

'இலங்கை அரசு அறிவித்துள்ள 'சர்வதேச சமூக தலையீட்டை' நான் ஆதரிக்கவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாதான் தகுந்த நாடு. இலங்கைஇந்தியாவைப்பகைப்பதால் பயன் இல்லை' எனவும் அனுரா பண்டார நாயக்க தெரிவித்திருக்கிறார், (கி)

## மஜீத் நியமனம்

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் இணைப் பதிகாரியாக பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப் எம்.ஏ.மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார். (கி)

## மக்கள் வெளியேற்றம்

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, உமையாள்புரம், இயக்கச்சி, சங்கத்தாவயல், கோயில் வயல் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் வெளியேறி தென்மராட்சிப் பகுதிக்கும் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கும் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் கிளிநொச்சி முகாமிலிருந்தும் நடாத்தப்படும் ''ஷெல்'' தாக்குதல்களுக்கு அஞ்சியும் இப்பகுதிகளில் ''ஹெலி'' பொம்மர் தாக்குதல்கள் அடிக்கடி நடாத்தப்படுவதையிட்டும் இப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

கடந்த வியாழக்கிழமை குறிஞ்சாத்தீவுப் பகுதியில் ஹெலி மூலம் இராணுவம் இறக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் இடம்பெறும் மோதல்களினாலேயேஇம் மக்கள் முற்றாக வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. (43 கி)

## ஓய்வூதிய வவுச்சர்கள் கப்பலில் வருகின்றன

யாழ். மாவட்டத்திலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்குரிய ஜூலை மாத வவுச்சர்கள் இன்று கொழும்பில் இருந்து உணவுப் பொருட்களுடன் வடபகுதி நோக்கிப் புறப்படும் கப்பலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

கொழும்பில் இருந்து புறப்படும் இக் கப்பல் திருமலை சென்று மாவை ஏற்றிக் கொண்டு முல்லைத்தீவு சென்று அங்கு தேவைப்படும் உணவுப் பொருட்களை இறக்கிய பின்னரே காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கின்றது.

பென்சன் வவுச்சர்கள் வந்து சேர்ந்ததும் சுமார் 18000 பேருக்கான பென்சன் கொடுப்பனவுப் பத்திரங்களும் 68 வங்கிக் கிளைகளுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கத்தேவையான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக யாழ் செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (66கி)

## கொக்காவில் களப்பலி



கொக்காவில் இராணுவ முகாம்மீது நடந்த தாக்குதலில் வீரமரணமடைந்த பெண்புலி கப்டன் உஷாவின் படத்தையே மேலே காண்கிறீர்கள்.

முள்ளியவளை, மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசையா லலிதாம்பிகை என்னும் இயற்பெயரைக் கொண்ட கப்டன் உஷா 20. 10. 1967-ஆம் திகதி பிறந்தவர். பெண்கள் அணியின் முதலாவது பயிற்சி முகாமில் இவர் பயிற்சி பெற்றவர் (கி)


## வட இலங்கை மருத்துவக்கல்லூரி மூளாய்

மேற்படி கல்லூரியின் சகல மாணவர்களும் 30-07-90 திங்கள் பிரசன்னமாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மூளாய்
24.07.90

பணிப்பாளர்,
வ. இ. ம. க.

07046


# பெளத்த சிங்கள இனவெறி, தீவிரவாதம்

1986 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் கட்டியெழுப்பப்பட்ட சிங்கள, பெளத்த தீவிரவாத அமைப்புகளில் ஒன்றான தாய்நாட்டுப் பாதுகாப்புப்படை (மவபீம சுரகீம வியாபாரய Campaign for the Protection of motherland) என்ற அமைப்பை இங்கு ஆராய்வோம்.

முன்னாள் பிரதமரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (Sri Lanka Freedom party) மற்றும் தினேஷ் குணவர்த்தனாவின் மகாஜன ஏக்சத் பெரமுன ஆகிய நடாளுமன்றக் கட்சிகளுடன் இவ்வமைப்பு நெருங்கிய உறவு கொண்டுள்ளது. செல்வாக்குடன் விளங்கும் பிரபல பெளத்த பிக்குகளான மதுலோவாவெ சோபிததேரோ மற்றும் விலகோட ஆரியதேவ ஆகியோரும் இவ்வமைப்பில் உள்ளனர். மேலும் பெளத்த தேசியவாத இடதுசாரி அமைப்புகளுடனும், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி) அமைப்புடனும் இது தொடர்பு கொண்டுள்ளது,

இவ்வகையான அமைப்புகளின் தத்துவார்த்த அடிப்படைகள் பின்வருமாறு:

**''ஒற்றுமை'' (ஏகியபாவய), ''இறையாண்மை'' (ஸ்வைரிபாவய)**

இவ்வடிப்படைகள் தற்போதைய இலங்கை அரசானது இனப்பிரச்சனைக்கு அதிகபட்சத் தீர்வாக வைத்திருக்கும் மாகாணசபைத் தீர்வையும், தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஈழப்போராளிகளின் கோரிக்கைகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்தையும், ஈழத்தையும் கடுமையாக எதிர்ப்பனவாகும். எனவே, அரசு அதிகாரம் எவ்விதத்திலும் பகிர்ந்தளிக்கப்படுவதை இவ்வமைப்புக்கள் எதிர்க்கின்றன.

இலங்கைத் தீவில் அமைதியை நிலை நாட்டுவதற்காக அரசு முன்வைத்துள்ள மாகாணசபைத் தீர்வை எதிர்க்கும் தாய்நாட்டுப் பாதுகாப்புப்படை (தா. பா. ப.) அமைப்பு, தானும் அமைதியைத் தோற்றுவிக்கப் பாடுபடுவதாகக் கூறுகிறது. இந்த அமைதியானது இவ்வமைப்பின் ''ஒற்றுமை'', ''இறையாண்மை'' ஆகிய கருத்தாக்க அடிப்படைகளின் மேல் கட்டப்பட்டதாகும்.

தாய்நாட்டுப் பாதுகாப்புப்படை அமைப்பை ஆராயும் போது, இலங்கை பெளத்த மதகுருக்களின் சங்கமானது இலங்கையின் அரசியல் கட்சிகளை எவ்வாறு ஆட்டுவிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். தா. பா. ப. போன்ற இடைநிலை அமைப்புகள் மூலமாகவே இது சாத்தியப்படுகிறது. இதனால் புத்த பெருமானின் ''அறிவுரைகள்'' அரசியல் செயற்பாடுகளாக் மாற்றப்பட்டுக் கடைப்பிடிக்கப்படுவதும் சாத்தியமாகிறது.

1979-ம் ஆண்டுக்குப்பிறகே புதிய சிங்கள பெளத்தத் தீவிரவாத அமைப்புகள் தோன்றி வளர்ந்தன. ''மண்ணின் மைந்தர்'' (பூமிபுத்ர) என்ற கோஷத்தை முன் வைத்து, சிங்கள தமிழ் மக்களிடையே இருந்த இனரீதியான பிளவை நிரந்தரமானதாக இவை மாற்றிவிட்டன.

இவ்வமைப்புக்களின் கருத்தியலானது, மரபு வழியான பெளத்த இலக்கியங்களில் தமிழர்களைப்பற்றிக் கூறப்பட்டு வந்தவற்றையும், சென்ற நூற்றாண்டின் இறுதியில் அநகாரிக தர்மபால மேற்கொண்ட இனவாதப் பிரசாரத்தையும் அடிப்படைகளாகக் கொண்டுள்ளது. பெளத்த நூல்களான மகாவம்ச, மகாவம்சய சிங்கள, விரிவாக்கப்பட்ட மகாவம்ச வம்சத்த பகாசினிபூஜாவலிய, சதர்ம வங்காலய, தூபவம்சய, ராஜவலிய ஆகிய பல புத்தகங்களில் இக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றின்படி துட்டகைமுனு தமிழர்களைக் கொன்று குவிக்க நேர்ந்ததைப் பற்றிக் குற்ற உணர்வுடன் பேசும்போது அவனுக்குச் சொல்லப்பட்டது, ''தமிழர்கள் மனிதர்களல்லர், எனவே அவர்களைக் கொல்வதில் தவறில்லை'' என்பதாகும். எனவே இக் கருத்தியல் ஒரே சமயத்தில் பழமையானதும், நவீனமானதும் ஆக விளங்குகின்றது.

இவ்வமைப்புக்களிடையே ஒற்றுமையின்றி பல முரண்பாடுகளே உள்ளன. பிற பெளத்த சமய இயக்கங்கள் இவற்றுடன் கருத்து மோதலைத் தொடுத்து வருகின்றன. இதனால் முழுமையான பெளத்த முன்னணி என ஒன்று ஏற்படாமல் போய்விடலாம். மேலும் இவ்வமைப்புக்கள் அனைத்துமே ஏதோ ஓர் அரசியல்கட்சியுடன் நேரடித் தொடர்பு வைத்துள்ளன தமிழர் உரிமைகள் குறித்த இக் கட்சிகளின் கொள்கைகளை விவாதிப்பதில் இவ்வமைப்புக்கள் பெரும் பங்கு ஆற்றியுள்ளன.

பழைய பெளத்த அமைப்புகளில், அகில இலங்கை பெளத்த காங்கிரஸ் (All Ceylon Buddhist Congress) மற்றும் உலக பெளத்தர் கழகம் (World Fellowship of Buddhists) ஆகியவை மட்டுமே தீவிரவாத நோக்குள்ளவை.

1986ஆம் ஆண்டு நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் நடந்த இக்கழகத்தின் பதினைந்தாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:

''சுமார்70 சதவிகித மக்கள் பெளத்தர்களாக இருக்கும் இலங்கை என்னும் அருமையான நாட்டில் ஒரு பயங்கரவாத இயக்கம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இந்த இயக்கமானது இனவாத இயக்கமாகும். அந்நிய நாடுகளால் தூண்டப்பட்டு வரும் இந்த இயக்கம், பெளத்த தர்மத்தையும். பெளத்த கலாசாரத்தையும், பெளத்த வாழ்க்கை நெறிமுறைகளையும் அழித்தொழிக்க வேண்டும் என்ற சர்வதேசிய இலட்சியத்தினைக்கொண்டு பிரிவினைவாத முழக்கத்தின்கீழ் அந்த இலட்சியத்தை மறைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறது.''

(தொடரும்)

ஈரோஸ் எம். பி. பரராஜசிங்கம் கண்டனம்

# ஸ்ரீமாவோ, ஜெயவர்த்தனா எவ்வழியோ அவ்வழியிலேயே ஜனாதிபதி பிரேமதாஸ

இன்று தமிழ் பேசும் மக்களின் உரிமைப்பிரச்சனைகளை பேசித்தீர்ப்போம் என ஆட்சிக்கு வந்த ஐ. தே. க. அரசும் பிரேமதாஸவும் எப்படி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், ஜெயவர்த்தனாவும் தமிழ்மக்களுக்கு எதிராக இருந்தனரோ அதே பாணியில்தான் இன்றைய ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் புதிய வடிவத்தில் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) முன்னாள் எம்.பி. பரராஜசிங்கம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் மேலும் அவர்

நாம்பாராளுமன்றம்சென்று ஒருவருடமாகியும் எம்மால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சிங்கள குடியேற்றம் 6வது திருத்தம் நீக்கல், மலையக மக்களின் குடியுரிமை வழங்கல் எதையும் இந்தஅரசு நிறைவேற்றவில்லை.

இப் பாராளுமன்றத்தில் உள்ளஆளும் கட்சியில் இருந்து எதிர்க் கட்சிகள் வரை யாவும், சிங்கள இனவாதத்தை வளர்க்கிறதே தவிர தமிழ் மக்களின் குறைந்தளவாவது உரிமைகளைக் கொடுக்கும் எண்ணங்கள் கூட தெரியவில்லை.

இன்று ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள அரசு போர்ப் பிரகடனம் செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் எத்தனையோ அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல தமிழ் பெண்கள் மானபங்கப் படுத்தப் பட்டுள்ளனர்.

வடபகுதியில் மட்டும் 3லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளனர். விமானத் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக நடாத்தப்படுகிறது. வேறொரு நாட்டுடன் போர் செய்வது போன்று சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது போர் தொடுத்துள்ளது.

வெளிநாடுகளிலும், உள் நாட்டிலும், தாம் தமிழ் மக்களை கொல்லவில்லை, விமானத் தாக்குதல்கள்மேற்கொள்ளவில்லையென பொய்ப் பிரசாரம் செய்து கொண்டு அதற்கு எதிர்மாறாக வடக்கு, கிழக்கு பகுதியில் கடும் மோதல்களையும். பொருளாதாரத் தடையையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக வடபகுதியில் அத்தியா வசியப் பொருட்கள் கூட அனுப்பாது தடை செய்யப்பட்டுள்ளது. இப்படியான நிலையில், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக நாம் இருந்து கொண்டு இதே மக்களின் படுகொலைகளையும். சிங்கள இனவாதத்தின் கொடுமைகளையும் இந்த பாராளுமன்றம் கண்டிக்காமல் அதை தடுத்து நிறுத்தாமல் மாறாக., சிங்கள இனவாத அமைச்சர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாய்க்கு வந்த விதத்தில் பேச்சுக்களை மேற்கொள்வதைப்பார்க்கும்போது இப் பாராளுமன்றமானது சிங்கள மக்களை பிரதித்துவப் படுத்தும் பாராளுமன்றமாகவே தென்படுகிறது. இனி மேலும் இப்பாராளுமன்றத்தில் நான் அங்கம் வகிக்க விரும்பவில்லையென்று கூறி எனது பதவியை இராஜினாமாச் செய்கிறேன். இதை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன். எனக்குறிப்பிட்டுள்ளார். (து)

## வவுனியா செல்ல 1000 ரூபா

சுமார் நூற்றுக்கும் அதிகமான கொழும்புப் பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில் மூன்று மினி பஸ்கள் வவுனியா நோக்கிப் புறப்பட்டுச் சென்றன.

இப்பிரயாணிகள்வவுனியா, நம்பைக்குளம் வரை கொண்டு செல்லப்படுவார்கள். பின்னர் கத்தோலிக்க குருவானவர் ஒருவரின் உதவியோடு இவர்கள் மேற்கொண்டு கொழும்பு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அறியப்படுகின்றது.

வவுனியா வரையான பிரயாணத்திற்கு ஒருவருக்கு ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது. முத்திரைச் சந்தையடியில் அமைந்துள்ள பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கான ஆசனப் பதிவுகள் தினசரி நடைபெற்றுவருகின்றன. (66 கி)

## கொழும்பு பஸ் இல்லை

நேற்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு பஸ்சேவை ஏதும் நடைபெறவில்லை இதனால் நேற்று கொழும்பு செல்லவிருந்த சுமார் 200 பயணிகள் முத்திரைச் சந்தியில் காத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது இன்று அவர்கள் பயணத்தை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 66-து

### ஊழியர்...

கடமையில் உள்ள ஊழியர்கள் சீருடையில் இருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளபோதும் பல ஊழியர்கள் சீருடையில் கடமையில் ஈடுபடுவதில்லையென மேலும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது தேவைகளை ஊழியர்கள் மூலம் பூர்த்தி செய்வதற்கு அக்கறை காட்டுமாறு நோயாளிகள் கேட்கின்றனர். (03து)

### இலங்கை...

இலங்கையில் உள்ள இத்தாலிய தூதுவர் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் இச் செய்தியை நேற்று கொழும்பில் வெளிவிவகார அமைச்சிடம் கையளித்தார்.

போரினால் பொதுமக்கள் பலர் கொல்லப்படுகின்றனர். பலர் அகதிகளாக அல்லல்படுகின்றனர். மீண்டும் நாட்டில் அமைதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத்தாம் நம்புவதாகவும் மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளே அதிகமாக இலங்கைக்குப்பொருளாதார உதவி வழங்கும் நாடுகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (து

### சுன்னாகத்தில்..

வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெருந்திரளான மக்கள் திரண்டுவந்து இதனைப் பார்வையிட்டனர். 48-து

### கோட்டையில்..

இதே சமயம் இப்பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு படைகள் கோட்டைப்பகுதியில் புதிய நடவடிக்கைகளில் இறங்கலாம் என பி. பி, ஸி நேற்றிரவு குறிப்பிட்டது. (து

### சுழற்சி முறை...

மூன்று ஜெனரேட்டர்களில் இரண்டு ஜெனரேட்டர்கள் பழுதடைந்த காரணத்தினாலே சுழற்சி முறை மின் விநியோகம் பாதிப்படைந்திருந்தது.

இது சம்பந்தமான முந்திய செய்தி இரண்டாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (03து)

## பராவெளிச்சம்

காங்கேசன் சீமெந்து ஆலையை நோக்கி தினமும் பரா வெளிச்சம் ஏவப்பட்டு வருகின்றது. (48 து)

### எமது பாதுகாப்பை ..

அகதிகளாக இந்தியாவிற்கு தப்பி ஓட முயலும் தமிழ் மக்கள் கடலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்படுகின்றனர் காயமடைந்த மக்களுக்கு மருத்துவ வசதிகளோ, மருந்தோ துளி அளவும் கிடையாது. உணவுப்பொருட்கள், எரிபொருட்கள், மின்சாரம் உட்பட எந்தப் பொருட்களும் கிடைக்காமல் தமிழ் மக்கள் அவதியுறுகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு உணவு தரவில்லை. மருந்துதரவில்லை என்பதையிட்டு தமிழ் மக்கள் ஒப்பாரி வைத்து பயனில்லை ஸ்ரீலங்கா அரசு தமிழர்களை எதிரிகளாகக் கருதி அழித்தொழிக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது. உணவு முதற்கொண்டு உடுபுடவை வரை எமது அனைத்துத் தேவைகளையும் நாமே நிறைவு செய்துகொள்ளத் தயாராகவேண்டும். எமது பாதுகாப்பை நாமே தேடிக் கொள்ள வேண்டும்.

மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட இந்த இனவெறி ஆட்சியாளர்கள் கடந்த காலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளை, கோரப் படுகொலைகளை யாரும் மறந்துவிடமுடியாது.

உலகில் எங்குமே நடைபெற்றிராத வகையில் வெலிக்கடைச் சிறையில் தண்டனைக் கைதிகளாகவும். விசாரணைக் கைதிகளாகவும் இருந்த 53 போராளிகளையும், பொது மக்களையும் சிங்கள இனவாதப் படையினரும், குண்டர்களுமாகச் சேர்ந்து 1983 ஜூலை 25, 27 ஆம் திகதிகளில் கோரமாகக் கொன்று குவித்து 7 ஆண்டுகள் மறைந்துவிட்டன.

சிங்கள இனவெறிப்படையினரின் அந்தக் கோரத்தாக்குதலை எதிர்கொண்டு வெலிக்கடைச் சிறையில் தங்கள் இன்னுயிரை ஈந்த விடுதலைப் போராட்ட முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி மற்றும் எமது இயக்கத்தின் தூண்களாகச் செயற்பட்ட தாமு கந்தையா (புத்தூர்) சிவானந்தராசா (மூதூர் சத்யசீலன் (அச்சுவேலி) உட்பட அனைவருக்கும் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது தேவைகளையும் எமது பாதுகாப்பையும் நாமே தேடிக்கொள்வோம் என்று உறுதியுடன் செயற்படுமாறு தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் வேண்டுகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

### புதிய பாணியிலான கொள்ளை

## "இன்றிரவு தாக்குதல் வேறு இடத்துக்கு செல்லுங்கள்"

இரவு தாக்குதல் நடக்கப் போகிறது இவ்விடத்தை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள் என போராளிகள் பாணியில் எச்சரித்துவிட்டு அவ்வீடுகளுக்குச் சென்று திருடும் சம்பவங்கள் யாழ், நகர்ப் பகுதியில் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு பெருமாள் கோவில் பகுதிக்கு வந்த இளைஞர் கோஷ்டியொன்று இன்றிரவு தாக்குதல் நடக்கப் போகிறது. வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள் என அப்பகுதியிலிருந்தவர்களுக்கு அறிவித்ததாம். இதனை நம்பி அப்பகுதியைச் சேர்ந்தோர் வேறு இடங்களுக்கு அவசரப்பட்டு சென்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப்பகுதியிலுள்ள ஆறு வீடுகள் அன்றிரவு கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

து

## நயினை கடலில் மர்மப் படகுகள்

நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய கடல் பிராந்தியங்களில் கடந்த சில நாட்களாக கருமை நிறமுடைய மூன்று பிளாஸ்ரிக் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்த மர்ம படகுகள் இரவு நேரங்களில் பெரிய வெளிச்சங்களின் உதவியுடன் நடமாடி வருகின்றது. இந்த நிலையால் அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடன் இருந்து வருகின்றார்கள்.

அத்தோடு அப்பகுதிக் கடலில் பாரிய கப்பல் ஒன்றும் இடையிடையே நடமாடி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (20 கி)

## குச்சவெளியில் ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் இரவு திருகோணமலை குச்சவெளி இராணுவ முகாமில் இருந்தும் அப்பகுதி கடலில் இருந்தும் ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் வாழும்பகுதிகளை நோக்கி வீசப்பட்ட இந்தஷெல்கள் வெடித்ததில் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 03 து

## கைதானவர் கொலை

செட்டிகுளத்தில் கடந்த 17 ம் திகதி இராணுவத்தினரால் கைதான. மதுரை நாகேந்திரன் (22) என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இவரது சடலம் செட்டிகுளம் பொதுக்கிணற்றினுள் இருந்து நேற்று முன்தினம் பொதுமக்களால் மீட்கப்பட்டுள்ளது. 03து

## புலிகள் கவனிப்பர்

உணவு பங்கீட்டு அட்டையில் மோசடி இடம் பெற்றால் அப்படி மோசடி செய்பவர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது,

தற்போது உணவுப் பொருட்கள் பங்கீட்டு முறையில் கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்பட்டுவருகின்றது. ஒரு நபர் தன்னுடன் இரண்டு, மூன்று உணவுப் பங்கீட்டு அட்டைகளை வைத்திருந்து வெவ்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பங்கீட்டுப் பொருட்களை வாங்கக்கூடும். இதனாலேயே இவ்வாறு தெரிவிக்கப்படுகிறது. (24-கி)

### பரந்தன்...

வத்தினர் பூங்காவனம் சந்தியை விட்டு பின்வாங்கியதாகவும் பின்வாங்கும் போது பொதுமகன் ஒருவரை சுட்டுக் கொலைசெய்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். தற்போது பூங்காவனம் சந்தியில் இருந்து பின்வாங்கிய இராணுவத்தினர் பரந்தன் சந்தியில் நிலைகொண்டுள்ளனர்.

பரந்தன் சந்தியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கிளிநொச்சி முகாம் நோக்கி முன்னேறுவதற்கு தொடர்ந்தும் பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இவற்றுக்கு ஆதரவாக விமானங்கள் தொடர்ந்தும் குண்டு மழை பொழிந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (03து)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 25-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,